டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 25.12.2024 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 156 - Madurai | Online Edition

# வடதமிழக கடலோர மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, டிச.24

தமிழகத்தில் அடுத்த ஒரு வாரத்திற்கு மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில், தெற்கு ஆந்திர வடதமிழக கடலோரப் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, நேற்று (24-12-24) காலை 8.30 மணியளவில் தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில், தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளில் நிலவியது. மேலும் இது, மேற்கு தென்மேற்கு திசையில் நகர்ந்து, அடுத்த 24 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு பகுதியாக அதே பகுதிகளில் வலுவிழக்கக்கூடும். மேலும், லட்சத்தீவு மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.




இதன் காரணமாக இன்று (25-12-24) வடதமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும்,

**அனைவருக்கும் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்**

**விடுமுறை அறிவிப்பு**

25.12.2024 (புதன்கிழமை) கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு அலுவலகத்திற்கு விடுமுறை. எனவே, எமது அடுத்த மின்னிதழ் 27.12.2024 (வெள்ளிக்கிழமை) வெளிவரும்.

- நிர்வாகி

புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

26ம் தேதியில் தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

27ம் தேதியில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

28 மற்றும் 29ம் தேதிகளில் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

# விவசாய தின விழிப்புணர்வு பேரணி



விழுப்புரம், டிச.24

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், சிறுவாடி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் எஸ்.ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரி இணைந்து நடத்திய விவசாய தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

சிறுவாடி ஊராட்சி பள்ளியில் தொடங்கிய பேரணி முக்கிய வீதிகள் வழியாக சென்றடைந்தது. இப்பேரணியில் பள்ளி தலைமை ஆசிரியர் எஸ்.ஆனந்தன் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் முன்னிலை வகித்தனர்.

இப்பேரணியில் எஸ்.ஆர்.எம். வேளாண் அறிவியல் கல்லூரியின் நான்காம் ஆண்டு தோட்டக்கலை மாணவிகள் காந்திமதி, கஸ்தூரி, நிா, ஜனனி, ஸ்ரீநிதி, லக்சன்யா, மினிா மற்றும் ஹேமவர்ஷினி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பள்ளி மாணவர்கள் விவசாயம் குறித்த பதாகைகளை ஏந்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நோனி மற்றும் கற்றாழையில் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், டிச.24

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நோனி மற்றும் கற்றாழையிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியானது 26 மற்றும் 27ஆம் தேதிகளில் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையத்தில் (வாயில் எண் 7, மருதமலை சாலை வழி), கீழ்கண்ட தலைப்புகளில் பயிற்சி வழங்கப்பட உள்ளது.




- நோனி –பிளைன், குவாஷ், ஊறுகாய், ஜாம்
- கற்றாழை – பழ ரச பானம், தயார் நிலைபானம், கேண்டி

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500/- + GST 18%) பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003. அலைபேசி எண் : 94885 18268, தொலைபேசி எண் : 0422 6611268 தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தனியார் உர விற்பனை நிலையங்களில் ஆய்வு



பெரம்பலூர், டிச.24

பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் பாபுவின் உத்தரவுப்படி வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு ராதா கிருஷ்ணன், பெரம்பலூர் வட்டாரத்தில் உள்ள தனியார் உரக் கடைகளை ஆய்வு செய்தார்.

அப்போது வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு ராதாகிருஷ்ணன், மாவட்டத்தில் போதுமான அளவுக்கு உரங்கள் இருப்பதாகவும் விவசாயிகள் எப்பொழுதும் ஆதார் கார்டை எடுத்துக்கொண்டு உரங்களை வாங்க வேண்டும், தற்போது நானோ யூரியா மற்றும் நானோ டிஏபி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திலும் சில தனியார் உரம் விற்பனை நிலையத்திலும் இருப்பில் உள்ளது. இதை பயன் படுத்துவதால் விவசாயத்தில் செய்யப்படும் செலவினத்தை குறைத்து மண்ணின் வளத்தை காத்து பயிர் விளைச்சலில் அதிக மகசூல் எடுக்க பயன்படுத்த கேட்டுக் கொண்டுள்ளார். விவசாயிகள் அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங்கள் டிஏபி உரங்களை பயன்படுத்தலாம். டிஏபி குறைவாக கிடைக்கப் பெற்றால் அதற்கு பதிலாக சூப்பர் பாஸ்பேட்டை அடி உரமாக பயன்படுத்தலாம். தற்போது ட்ரிபிள் சூப்பர் பாஸ்பேட் வந்துள்ளது, இதை அடி உரமாக பயன்படுத்தலாம். மேல் உரமாக விவசாயிகள் நானோ யூரியா மற்றும் நானும் டி ஏ பி ஐ பயன்படுத்தலாம் மற்றும் பொட்டாஷ் மேலோரமாகவும் பயன்படுத்தலாம். விவசாயிகள் தங்களின் மண்ணை ஆய்வு செய்து அதற்கு ஏற்ற போல் சமச்சீர் உரங்களை வயலுக்கு இடுவதால் மண்ணின் வளம் காக்கப்படுகிறது.

சமச்சீர் உரங்களில் பண்ணை கழிவு, தொழு உரம், சிட்டி கம்போஸ்ட், வேப்ப புண்ணாக்கு, உயிர் உரம் அசோஸ் பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, பொட்டாஸ் பாக்டீரியா, துத்தநாக பாக்டீரியா, மற்றும் இயற்கை பூச்சிக்கொல்லி நோய் மருந்துகளான டி விருடி, சூடாமோனஸ், மெட்டா ரசிம் போன்ற இயற்கை பொருட்களை பயன்படுத்துவதால் மண் வளம் காக்கப்படுவதுடன் சாகுபடி செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 24.12.2024 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 40 | 45 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 45 | 50 | 57 | உருளை (பிற) | 30 | 38 |
| 1B | கத்திரி(Nadu) | 55 | 60 | 57A | உருளை(ஊட்டி) | 28 | 46 |
| 2 | வெண்டை | 30 | 36 | 58 | மேரக்காய் | 25 | 30 |
| 3 | தக்காளி (நாடு) | 20 | 25 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 35 | 40 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 20 | 24 | 60 | கேரட் | 54 | 58 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 70 | 80 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 55 | 60 |
| 6 | புடலை | 35 | 40 | 62 | நூல்கோல் | 45 | 50 |
| 7 | பீர்க்கன் | 45 | 50 | 63 | டர்னிப் | 40 | 46 |
| 8 | சுரைக்காய் | 30 | 34 | 64 | மு.கோஸ் | 20 | 26 |
| 9 | பாகற்காய் | 40 | 45 | 65 | மு.கோஸ்(கலர்) | | |
| 10 | கொத்தவரை | 35 | 40 | 66 | காளிபிளவர் | 40 | 45 |
| 11 | பூசணி | 14 | 16 | 67 | பட்டாணி | 110 | 120 |
| 12 | அரசாணி | 16 | 20 | 68 | பூண்டு | 200 | 295 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 38 | 42 | 69 | இஞ்சி | 46 | 100 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 50 | 54 | 70 | புருக்கோலின் | 160 | 180 |
| 15 | சி.வெங்காயம் | 58 | 62 | 71 | பென்னி பீன்ஸ் | 74 | 78 |
| 16 | பெ.வெங்காயம் | 34 | 37 | 72 | குடமிளகாய் | 52 | 56 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 35 | 40 | 73 | ஊட்டி அவரை | 100 | 130 |
| 18 | பச்சை மொச்சை | 60 | 65 | 74 | பஜ்ஜி மிளகாய் | | |
| 19 | முருங்கை | | | 71A | | | |
| 20 | தேங்காய் | 54 | 58 | | | | |
| 21 | மாங்காய் | 60 | 70 | | | | |
| 22 | வாழைக்காய் | 30 | 34 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 43 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 50 | 58 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 28 | 32 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 25 | 30 |
| 28 | கறிவேப்பிலை | 75 | 78 | 79 | மாதுளை | 120 | 180 |
| 29 | கொத்தமல்லி | 34 | 38 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 8 | 10 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 18 | 20 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 18 | 20 | 83 | ஆரஞ்ச் | 50 | 70 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 18 | 20 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 18 | 20 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 18 | 20 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 45 | 50 |
| 40 | கோவக்காய் | 50 | 55 | 91 | பூவன் | 35 | 38 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 38 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 24 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 35 | 40 | 96 | நேந்திரன் | 70 | 74 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 40 | 45 | 97 | செவ்வாழை | 70 | 78 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 10 | 12 | 99 | நார்த்தங்காய் | | |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | | | 100 | கறிப்பலா | | |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 78 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 40 | 45 | | | | |
| 55A | துவரை | | | | | | |

# நெல் வயல் சூழல் ஆய்வு



அரியலூர், டிச.24

அரியலூர் மாவட்டம், திருமானூர் வட்டாரம், கீழப்பழுவூர் கிராமத்தில் நெல் வயல் சூழல் ஆய்வு பற்றிய களப்பயிற்சி அளிக்கப்பட்டது.

அரியலூர் மாவட்ட உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண்மை அலுவலர் ப.தமிழ்குமார் ஆலோசனை வழங்கினார். பயிற்சியில் மண் பரிசோதனை அடிப்படையில் உரமிடுதல், தரமான அரசு சான்று பெற்ற விதைகளை பயன் படுத்துதல் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளான சூடோமோனஸ் ஃப்ளோரசன்ஸ், டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் போன்றவற்றை பயன்படுத்தும் முறைகள் அதன் பயன்கள், பயிர்களை தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை அடையாளம் காணுதல், நன்மை செய்யும் பூச்சிகளை பாதுகாத்தல் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது. உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, பொட்டாஸ் பாக்டீரியா, ஜிங் பாக்டீரியா போன்றவற்றை பயன்படுத்தும் முறைகள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும் பயிற்சியில் வயல்வெளிகளில் விளக்கு பொறி வைத்தல், இன கவர்ச்சி பொறி வைத்தல், டி வடிவ குச்சிகள் வைத்தல், பூச்சி தாக்குதல் பொருளாதார சேத நிலைகளுக்கு அதிகமான நிலையில், இயற்கை பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்துதல், இரசாயன உரங்களை பகிர்ந்தளித்தல், வரப்புகளில் உளுந்து, பச்சைபயிறு, தட்டைப்பயிறு போன்றவை சாகுபடி செய்தல். பயிர் சுழற்சி முறைகளை கையாளுதல் போன்ற இயற்கை சூழலை பாதுகாக்கும் முறைகளுடன் சாகுபடி செய்தல் அவசியம் என்பதை பயிற்சியில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

பயிற்சி ஏற்பாடுகளை திருமானூர் வட்டார துணை வேளாண்மை அலுவலர் கொளஞ்சி செய்திருந்தார். உதவி வேளாண்மை அலுவலர் சரத்குமார், உதவி தொழில்நுட்ப மேலாளர் சுந்தரமூர்த்தி மற்றும் முன்னோடி விவசாயிகள் பலர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.


Rithvik Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# சேவையூர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் சார்பாக தேசிய விவசாயிகள் தினம் விழா



விருதுநகர், டிச.24

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி வட்டாரத்திலுள்ள சேவையூர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் சார்பாக 23.12.24யன்று தேசிய விவசாயிகள் தினம் வெகுவிமரிசையாக கொண்டாப் பட்டது. இந்த நிகழ்விற்கு சிசிடி செயல் இயக்குநர் பத்மாவதி, திட்ட இயக்குநர் ஜான் பிரிட்டோவின் வழிகாட்டுதலின் பேரில் சி.இ.ஓ பார்த்த சாரதி தலைமையில் சிறப்பாக கொண்டாட பட்டது. அவர் தனது தலைமை உரையில் இந்த நிறுவனம் நபார்டு வங்கியின் உதவியுடன் தொடங்கப்பட்டு, 2019 முதல் முழுமையாக செயல் பட்டு வருவதுடன் விவசாயிகளின் நலனுக்காக முழுமூச்சாக செயல்பட்டு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதோடு மட்டுமல்லாமல் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள 5 கிராம பஞ்சாயத்துகள் (முடுக்கன் குளம் , அழகாபுரி, திம்மாபுரம், பிள்ளயார்குளம்) தேர்வு செய்யப்பட்டு அதற்கான செயல்பாடுகளை செய்து வருவதாகவும் கூறினார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அக்ரி கிளினிக்யின் விவசாய ஆலோசகர் சந்திர சேகரன் பேசுகையில், தேசிய விவசாய தினத்தின் முக்கியத்துவம் பற்றியும் இந்த நாள் உருவாக்க காரணமான முன்னாள் பிரதமர் சரண்சிங் அவர்களின் சாதனைகளை பட்டியலிட்டார். இனிவரும் காலங்களில் விவசாயம் நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி ஒரு எக்கரில் ஒரு லட்சம் வருமானம் பெறுவதற்கான வழிமுறைகளை பற்றியும் தெரிவித்தார். மேலும் தற்போது அக்ரி கிளினிக் முழுமையாக செயல்பட்டு வருவதுடன் விவசாயிகளுக்கு தேவையான அனைத்து இடுபொருட்களும் ( விதை, உரம், பூச்சி மருந்து, உயிரியல் பூச்சி / பூஞ்சான மருந்துகள்) மட்டுமின்றி வாடகைக்கு வேளாண் கருவிகளும் வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

முக்கிய இடங்களில் FLX BANNER, விவசாயிகளுக்கு அக்ரி கிளினிக் செயல்பாட்டினை குறித்து விழிப்புணர்வுக்காக வைக்கப் பட்டுள்ளன என்றார். தற்போது நிலக்கடலையில் ஊட்டசத்து கரைசல் தெளிப்புக்கான உர கிட் (டிஏபி + அம்மோனியம் சல்பேட் + போராக்ஸ்) விவசாயிகளுக்கு வழங்கப்படுவதாக தெரிவித்தார். அனைவரும் இந்த அக்ரி கிளினிக்-ன் சேவையை பயன்படுத்திட கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் விவசாயிகளுக்கு மூலிகை மற்றும் மருத்துவ குணமுள்ள செடிகள் (செவ்வாழை கன்று, கறிவேப்பிலை, பப்பாளி, முருங்கை) போன்ற செடிகள்யுடன் வீட்டு தோட்ட காய்கறி விதைகள் (கீரை, புடல், பாகல், அவரை, பூசணி) விதைப் பொட்டலங்களையும் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முன்னோடி விவசாயிகள் கணேசன், மங்கள நாதன், சந்திரசேகரன், போஸ், கந்த சாமி, ஜெயசந்திரன், மலர், சரண்யா, சங்கீதா உள்ளிட்ட விவசாயிகள் கலந்து கொண்டு தங்களுடைய கருத்துகளை தெரிவித்தனர். முடுக்கன்குளம் பஞ்சாயத்தை சேர்ந்த விவசாயிகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கள அலுவலர்கள் பரதன், பிரியா சிறப்பாக செய்திருந்தனர்.

# விவசாய தினத்தை முன்னிட்டு பயிற்சி முகாம்




விழுப்புரம், டிச.24

விழுப்புரம் மாவட்டம், மரக் காணம் வட்டம், திண்டிவனத்தில் உள்ள கே.ஆர்.எஸ் அம்மா மஹாலில் தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் மற்றும் எஸ்.ஆர்.எம். வேளாண் அறிவியல் கல்லூரி மாணவிகள் இணைந்து நடத்திய விவசாயத்தில் இரட்டிப்பு வருமானம் பெற பல்வேறு வகையான பழ பயிர்களை பயிரிடுதல் என்ற தலைப்பில் மாபெரும் பயிற்சி முகாம் நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமில் மரக்காணம் ஒன்றிய தலைவர் ஏ.வேணுகோபால் மரக்காணம் ஒன்றிய செயலாளர் எம்.பிரகாஷ் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். பழ பயிர்களைப் பயிரிடுவதன் மூலம் விவசாயத்தில் இரட்டிப்பு வருமானம் பெறுவதை பற்றி முனைவர் வெ.கோபி (தோட்டக்கலை, உதவி பேராசிரியர்) விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். இப்பயிற்சி முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# இப்கோ நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்



செங்கல்பட்டு, டிச.24

செங்கல்பட்டு, கே.கே.புதூர் மற்றும் அச்சரபாக்கம் கிராமத்தில் நானோ உரங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், இப்கோ, கள அதிகாரி காளிதாசன், தோட்டக் கலை பயிர்களில் இப்கோ நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி மற்றும் சாகரிகா பயன்படுத்தும் முறை மற்றும் நானோ உரங்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கினார். மேலும், இரசாயன உரங்களின் பயன்பாட்டால் மண் மாசுபடும் மற்றும் மண் வளம் குறையும் என்றும் மண் வளத்தை காக்க நானோ உரங்களை பயன் படுத்தலாம் என்றும் தெரிவித்தார்.




குறைந்த செலவில் அதிக மகசூல் பெறவும், துல்லியமான முறையில் நானோ உரங்களை தெளிக்கவும் இப்கோ கிசான் ட்ரோன் சேவையை பயன்படுத்தலாம் என்றும் நானோ உரங்களுடன் பிற வேளாண் பூச்சிக் கொல்லி மருந்துகளும் கலந்து தெளிப்பதனால் இடுபொருள் செலவு குறையும் என்றும் கூறினார். மேலும், நானோ உரங்கள் வாங்கினால் இப்கோவின் விவசாயிகளுக்கான விபத்துக் காப்பீடு திட்டமான சங்கட ஹரன் பீமா யோஜனாவின் மூலம் ரூ.2,00,000 வரை காப்பீடு பெறலாம் என்றார்.

# வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பயன்பாடுகள் பயிற்சி



கடலூர், டிச.24

வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பயன்பாடுகள் பயிற்சியான விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இயங்கும் தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் துறை மூலம் 23.12.24 அன்று திட்ட ஒருங்கிணைப்பாளர், முனைவர் க. நடராஜன் துவக்கி வைத்து வேளாண் இயந்திரங்கள் பயன்பாடு பற்றி விளக்கினார். பாஸ்கரன், உதவி செயற் பொறியாளர், வீரசுப்பிரமணியன், உதவி பொறியாளர், சிவசுப்பிர மணியன், அஜிதா ஆகிய பொறியியல் துறை அலுவலர்கள் திட்டங்களையும், இயந்திரங்கள் பற்றியும் தெளிவாக எடுத்து உரைத்தனர்.

மேலும், வி.எஸ்.டி இயந்திர விற்பனை முகன்மையர் புனிதா அந்தோணி, ஜான் டீர் கம்பெனி, ஆர்.கே ஆட்டோமேபைல்ஸ் ஆகியோர் டிராக்டர், பவர் டில்லர், கரை அணைக்கும் கருவி, களை எடுக்கும் கருவி, சிறிதாக ஏற்படும் பழுதுகள் நிவர்த்தி மற்றும் பராமரிப்பு பற்றியும், மேலும் சூரிய மின்வேலி மற்றும் சூரிய உலர்த்தி பற்றியும் விரிவாக பயிற்சி அளிக்கப்பட்டது.

தேசிய உர நிறுவனம் சார்பாக பதக், கோட்ட மேலாளர் மற்றும் ரகுபதி ராஜன், உதவி கோட்ட மேலாளர் கலந்து கொண்டு நீரில் கரையும் உரங்கள், ரசாயன உரங்கள், கனிம உரங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். மேலும் இப்பயிற்சியில் தொழில்நுட்ப உரைகளை முனைவர்கள் கி.பாரதி குமார், கு.காயத்ரி, சு.கண்ணன், ப.சுகுமாரன், ஜெ.ஜெயக்குமார், க.கலைச்செல்வி கலந்து கொண்டு உரையாற்றினார்கள். இப்பயிற்சியில் 80க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# முருங்கை மற்றும் அதனுடைய வகைகள் என்ன?



முருங்கை மரத்தின் பெயர் (MORINGA OLIFERA) என்னும் தாவரவியல் பெயருடன் முருங்கேசியே குடும்பத்தை சார்ந்தது. இது ஒரு அதிசய மரம் (MIRACLE TREE) என்று அழைக்கப்படுகிறது. முருங்கை மரத்தின் ஒவ்வொரு பகுதியும் (இலை, காய், பூ பட்டை விதைகள்) மருத்துவ குணமுள்ளது. இது மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் நன்மை பயக்ககூடியவை.

### முருங்கை என பெயர் வந்தது ஏன்?

இது ஒரு காரணப் பெயர்தான். முருங்கை மரத்தின் கிளைகள் மிகவும் எளிதில் முறிந்து விடுவதால் என்னவோ தமிழில் இதனை முருங்கை என்று பெயர் வந்ததாகும். அதைப்போல ஆங்கிலத்திலேயும் டிரம்ஸ்டிக் (DRUM STICK) என்று அழைக்க படுகின்றன. ஆங்கிலத்தில் ட்ரம் என்னும் தாளவாத்தியம் வாசிக்கின்ற குச்சி போன்ற தோற்றத்தை உடையது.

### முருங்கை வகைகள்

முருங்கையின் தாயகம் தென்மேற்கு இந்தியா, உறை பனி, கொட்டும் பனியை அறவே விரும்பாத முருங்கை ஒரு வெப்ப மண்டல பயிர். எல்லா விதமான மண் வளத்திலும் வளரக் கூடியது.

முருங்கையின் வகைகள் இரண்டு வகைப்படும்.

1) பல்லாண்டு முருங்கை 2) செடி முருங்கை.

### பல்லாண்டு முருங்கை

பல்லாண்டு முருங்கை நிரந்தர மர வகை பயிர். இதனை குச்சி (போத்து) மூலமாக இனப்பெருக்கம் செய்யலாம். மூலனூர் முருங்கை, வலையப்பட்டி முருங்கை, செம் முருங்கை, யாழ்ப்பாண முருங்கை, ஜாப்னா முருங்கை மற்றும் பாலமேடு முருங்கை என பலவிதமான முருங்கைகள் உள்ளன. மர முருங்கையில் சாரசரியாக 100 காய்கள் வரை காய்க்கும்.

**செடி முருங்கை**

இது குறுகிய கால பயிராகும். செடி முருங்கை விதை மூலம் நடவு செய்யப்படுகிறது. ஒரு முறை விதைத்தால் 3 ஆண்டுகள் வரை காய்க்கும். காய்க்கும் திறன் குறைந்தால் இதனை வெட்டி விட வேண்டும்.

**பிகே எம் 1, பிகே எம் 2**

கே.எம் 1 தனராஜ் மற்றும் ஜி.கே.வி.கே 1, 2, 3 செடி முருங்கையில் மரமுருங்கை விட அதிகமாக கூடுதலான காய்கள் 200க்கு மேல் இருக்கும்.

**ஒரு மரத்தில் ஒரு கிலோ விதையில் எத்தனை விதைகள் இருக்கும்?**




2300 முதல் 2400 விதைகள் இருக்கும்.

முருங்கை விதைகளை ஊன்றியும் நாற்று பாவியும் (பைகளில்) நடலாம்.

தற்போதைய கால கட்டத்தில வெளிநாடுகளுக்கு முருங்கை இலை மற்றும் விதைகள் அதிகளவில் ஏற்றுமதி செய்யப் படுவதால் முருங்கை சாகுபடி ஊக்குவிக்க தோட்டகலைத் துறை மானியங்களை வழங்கி சாகுபடி அதிகரிக்க உதவுகிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# பெரம்பலூர் மாவட்டத்தில் பி எஸ் ஓ எந்திரத்தின் பழுது நீக்கும் முகாம் நடைபெற்றது

பெரம்பலூர், டிச.24

பெரம்பலூர் மாவட்டத்தில், மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் பாபுவின் ஆலோசனைப்படி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திலும் மற்றும் தனியார் உரம் விற்பனை




நிலையங்களில் பயன்படுத்தப்படும் பி ஓ எஸ் எஸ் எந்திரத்தின் பழுது நீக்கும் முகாம் வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் தரக் கட்டுப்பாடு ராதாகிருஷ்ணன் மற்றும் வேளாண்மை அலுவலர் தரக்கட்டுப்பாடு சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இந்த முகாமில் மாநில நேரடி பயன் பரிமாற்ற டிபிடி ஒருங் கிணைப்பாளர் அருண், வருகை தந்திருந்தார். அவ்வமயம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் இருந்தும் தனியார் உர விற்பனை நிலையங்களிலும் இருந்தும் 30க்கும் மேற்பட்ட உர விற்பனை நிலையங்களில் இருந்து பி ஓ எஸ் இயந்திரத்தினை செயல்பாடுகளை சரிபார்த்து பழுது நீக்கியும் தரப்பட்டது. இந்த நிகழ்வில் பி ஓ எஸ் இயந்திரத்தை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்றும் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அருண் தெரிவித்தார்.




வேளாண் உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு ராதாகிருஷ்ணன் கூறுகையில் விவசாயிக்கு உரங்களை ஆதார் கார்டு கொண்டு விற்பனை செய்ய வேண்டும் என்றும் விவசாயிகளுக்கு உரங்களை அவர்களின் பயிருக்கு ஏற்ப மற்றும் நிலத்திற்கு ஏற்ப மட்டுமே விநியோகிக்க வேண்டும் என்றும் யூரியாவே மிக அதிகமாக விவசாயிகளுக்கு வழங்க கூடாது என்றும் அடி உரமாக டிஏபி அல்லது காம்ப்ளக்ஸ் உரங்கள் அல்லது சூப்பர் பாஸ்பேட் அல்லது ட்ரிப்பில் சூப்பர் பாஸ்பேட் பயன்படுத்தலாம், மேல் உரமாக யூரியா பொட்டாஷ் கலந்து பயன்படுத்தலாம்.

அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திலும் சில தனியார் உர விற்பனை நிலையங்களிலும் நானோ யூரியா மற்றும் நானோ டி ஏ பி விற்பனைக்கு உள்ளது. இதைப் பற்றி எடுத்துரைத்து விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் விநியோகம் வேண்டுமென்றும் இயற்கை உரங் களான சிட்டி கம்போஸ்ட் ஆர்கானிக் கம்போஸ்ட் வேப்பம் புண்ணாக்கு ஆமணக்கு புண்ணாக்கு இவைகளை தரமானதாக விவசாயத்திற்கு உபயோகிக்க வேண்டும் என்றும் கூறினார்.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
• 100% LEAD FREE PIPE
• ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
• 25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
• 20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
• PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# வாலாஜா வட்டாரத்தில் கிராம வேளாண் முன்னேற்ற குழு கூட்டம்



ராணிப்பேட்டை, டிச.24

ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரத்தில் ஆத்மா திட்டத்தின் கீழ் கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்ட கிராமமான சென்னசமுத்திரம் கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்ற குழு கூட்டம் 24.12.24 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு வேளாண்மை உதவி இயக்குனர் திலகவதி தலைமை வகித்து நிகழ்ச்சியை துவங்கி வைத்தார். அவர் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களை எடுத்துரைத்தார்.

மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் மூலம் மண்வளத்தை பேணிக்காக்கும் முறைகளான பசுந்தாள் மற்றும் பசுந்தழை பயிர்களைக் கொண்டு மண்ணை மேம்படுத்தும் முறை, பயிர் சுழற்சி முறை, உயிர் உரங்களின் முக்கியத்துவம், மண்புழு உர பயன்கள் ஆகியவற்றின் தொழில்நுட்பங்களையும் விதை நேர்த்தியின் அவசியத்தையும் நுண்ணூட்ட சத்துக்களின் பயன்களையும் தெளிவாக விளக்கினார்.

தொடர்ந்து வேளாண்மை அலுவலர் நித்யா, பயிர்களை தாக்கும் பூச்சிகளை எவ்வாறு கண்டறிவது மற்றும் கட்டுப் படுத்துவது குறித்த விளக்கங்களையும், நன்மை செய்யும் பூச்சிகள் தீமை செய்யும் பூச்சிகளை கண்டறிதலையும் தெளிவாக விளக்கினார். ராதிகா, உதவி வேளாண்மை அலுவலர், கிடங்கில் உள்ள விதைகளின் நிலவரங்கள் உயிர் உரங்களின் பயன்பாடுகள் வேளாண் திட்டங்கள் ஆகியவற்றை குறித்து விளக்கமளித்தார்.

இறுதியாக சசிகலா, வட்டார தொழில்நுட்ப மேலாளர், உழவன் செயலியின் முக்கியத்துவம் குறித்தும் அதனை பயன்படுத்தும் முறைகள் மண்வளத்தை கண்டறிதல் மண்வள அட்டையின் பயன் பாடுகள் குறித்து விளக்கமளித்து நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு நன்றி கூறி நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

உதவி தொழில்நுட்ப மேலாளர்களான நர்மதா, ஜெயபிரகாஷ் இப்பயிற்சி சிறப்பாக அமைய உறுதுணையாக விளங்கினர்.

# தேசிய விவசாயிகள் தின கொண்டாட்டம்

திருச்சி, டிச.24

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, 23.12.24 தேசிய விவசாயிகள் தினத்தை முன்னிட்டு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.





ஆண்டு தோறும் டிசம்பர் 23 அன்று கொண்டாடப்படும் தேசிய விவசாயிகள் தினம், விவசாயிகளின் கடின உழைப்பு மற்றும் விலை மதிப்பற்ற பங்களிப்புகளை அங்கீகரிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு இன்றியமையாத நாள். உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் பொருளாதாரத்தைத் தக்க வைப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கும் விவசாயிகளின் முயற்சிகளை கௌரவிக்கின்றது இந்த நாள். இது விவசாய சமூகத்தை கௌரவிக்கும் பாரம்பரியத்தைத் தொடர்கிறது. இந்தியாவில், தேசிய விவசாயிகள் தினம் மிகவும் பெருமையுடன் கொண்டாடப்படுகிறது. குறிப்பாக கிராமப்புறங்களில் பயிர்களை பயிரிடுவதற்கும், விவசாயத் தொழிலை நிலைநிறுத்துவதற்கும் அயராது உழைக்கும் விவசாயிகள் நாடு முழுவதிலும் இருந்து கௌரவிக்கப்படுகிறார்கள்.

இந்த நாளில் திருச்சி மாவட்டம் போதாவூரில் உள்ள தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தில் வாழை திருவிழா மற்றும் விவசாயிகள் தின விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர், நிலைய விஞ்ஞானிகள் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை சேர்ந்த பல்வேறு விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் வாழை சாகுபடி சார்ந்த கருத்தரங்கம், கருத்துக் காட்சி மற்றும் வயல்வெளி செய்முறை விளக்கங்கள் நடத்தப்பட்டன. இரண்டாம் நிகழ்வாக, தொட்டியம் வட்டாரம் னி.களத்தூர் கிராமத்தில் பருத்தியில் மகசூல் அதிகரிக்க ட்ரோன் மூலம் பருத்தி பிளஸ் தெளிப்பு பற்றிய களப்பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் பருத்தியில் மகசூலை அதிகரிக்க மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்கள், பருத்தியில் சப்பை கொட்டுதலை தவிர்த்து மகசூலை அதிகரிக்கும் பருத்தி பிளஸ் தெளிப்பு போன்ற தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி வழங்கப்பட்டது. மேலும் ட்ரோன் மூலம் பருத்தி ப்ளஸ் தெளிப்பு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு மற்றும் தொழில்நுட்ப வல்லுநர் (பயிர் பாதுகாப்பு) முனைவர் இரா.ஷீபா ஜாஸ்மின் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் தொட்டியம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சௌந்தரராஜன், வேளாண்மை உதவி அலுவர் மாசிலாமணி உட்பட தொட்டியம் வட்டார பல்வேறு விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பருத்தியில் நுனி கிள்ளுதல் – ஓர் பார்வை



பருத்தியில் அதிகம் நீர் பாய்ச்சுவதாலும் தழைச்சத்து அதிகமாக இடுவதாலும் செடி வளர்ச்சி ஊக்குவிக்கப்பட்டு பூ காய் மற்றும் சப்பைகள் கொட்ட ஆரம்பிக்கும். இதனை கட்டுப்படுத்த நுனிக் கிள்ளுதல் அவசியமாகும். பயிர் வளர்ச்சியில் காய்கள் அதிக பருமன் ஆவதற்கும் நன்கு வெடிக்கவும் செய்ய வேண்டிய சில எளிய தொழில்நுட்பங்களில் நுனி அரும்பு கிள்ளுதல் என்பது முக்கிய தொழில்நுட்பம் ஆகும்.

தழைச்சத்து உரங்கள் அதிகமாக இடுவதால் பயிர்கள் சில சமயங்களில் தேவைக்கு அதிகமாக வளர்ந்து பூக்கும் திறன் பாதிக்கப்பட்டு காய்கள் பிடிப்பது குறைந்துவிடும். இத்தகைய தருணங்களில் செடியில் வளரும் நுனிகளை கிள்ளி விடுவதால் பக்க கிளைகள் உருவாகி பூக்களும் காய்களும் அதிக எண்ணிக்கையில் உண்டாகி தக்க காலத்தில் வெடிக்க உதவி செய்கிறது.

சத்துப் பொருட்கள் விரயம் ஆவதை தடுத்து பூ மற்றும் காய்களுக்கு ஊட்டம் அளிக்க உதவுகிறது.

## நுனி கிள்ளும் பருவம்

ரகமாக இருந்தால் 15 கணுக்களுக்கு மேல் (75 முதல் 90 ஆம் நாட்களில்) வீரிய ஒட்டு ரகமாக இருந்தால் 20 கணுக்களுக்கு மேல் (90 முதல் 100 நாட்களில் ) நுனி கிள்ளியபின் நாப்தலின் அசிட்டிக் அமிலம் 40 பி பி எம் (பிளானா பிக்ஸ்) 4 மில்லியை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் செடி வளர்ச்சி தடுக்கப்பட்டு பாய் கிளைகள் அதிகம் தோன்றும். மேலும் நுனி கிள்ளுவதால் காய் புழுக்களின் முட்டைகள் அழிந்து பயிர் பாதுகாக்கப்படும் என திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம், வேளாண்மை உதவி இயக்குனர் சந்திரமாலா தெரிவித்துள்ளார்.

# உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் முன்னேற்ற வழிகாட்டி கூட்டம்

புதுக்கோட்டை, டிச.24

புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) இணைந்து, அனைத்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் முன்னேற்றத்திற்காக உழவர் உற்பத்தியாளர் நிறுவன தலைவர்கள், இயக்குனர்கள் மற்றும் தொகுப்பு அடிப்படையிலான வணிக அமைப்பு /ஆதார நிறுவனம் (CBBO/RI) சார்ந்த அலுவலர்களுக்கு புதுக்கோட்டை வேளாண்மை துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) அலுவலகத்தில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான முன்னேற்ற வழிகாட்டி கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு வேளாண்மை துணை இயக்குனர் வேளாண் வணிகம் ரா.ஜெகதீஸ்வரி மற்றும் மாவட்ட வளர்ச்சி அலுவலர் (நபார்டு) தீபக்குமார் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப் பாளராக நபார்டு வங்கியின் மதுரை வேளாண் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு மையம் (MABIF) துணை மேலாளர் எஸ்.விக்னேஷ் கலந்து கொண்டனர். வேளாண் வணிகத்துறை திட்டங்கள் பற்றி வேளாண்மை துணை இயக்குனர் (வேளாண் வணிகம்), புதுக்கோட்டை எடுத்துரைத்தார். மத்திய அரசின் வேளாண் திட்டங்கள் மற்றும் மதிப்பு கூட்டி விற்பனை செய்தல் தொடர்பாக மாவட்ட வளர்ச்சி அலுவலர் நபார்டு எடுத்துரைத்தார். அக்மார்க் தரச்சான்றிதழ் பற்றிய விழிப்புணர்வு மற்றும் அதன் பயன்கள் பற்றி கு.அ.நிரஞ்சன், வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்), புதுக்கோட்டை எடுத்துரைத்தார். நபார்டு வங்கியின் மதுரை வேளாண் தொழில்முனைவோர் ஊக்குவிப்பு மையம் (MABIF) துணை மேலாளர் எஸ்.விக்னேஷ் வேளாண் விளைபொருட்களுக்கான புவிசார் குறியீடு பெறுவது தொடர்பாக எடுத்துரைத்தார். உணவு பதப்படுத்துதல் இயந்திரங்களுக்கான மானியம் தொடர்பான பாரத பிரதமரின் உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களுக்கான திட்டம் (PMFME) மற்றும் வேளாண்மை உட்கட்டமைப்பு நிதி (AIF) திட்டம் பற்றி அறந்தாங்கி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) செ.கந்தகிரிவாசன் எடுத்துக் கூறினார்.

இக்கூட்டத்தில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் வணிகத் திட்டங்கள் மற்றும் வரவு செலவு விவரங்கள் கேட்டறியப்பட்டது.

கால்நடை தீவன மையம் அமைப்பதற்கு உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களிடம் ஆலோசனை நடத்தப்பட்டது. மதிப்புகூட்டுப் பொருட்களை தயார் செய்து விற்பனை செய்திட ஆலோசனை வழங்கப்பட்டது. அனைத்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களும் தங்கள் பொருட்களை இணைய வழியில் விற்பனை செய்திட அறிவுரை கூறப்பட்டது. மின்னணு வேளாண் சந்தை மூலம் பயன்பெற ஒருங்கிணைந்த ஒற்றை உரிமம் பெறாத உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் விரைந்து பெற்றிட அறிவுறுத்தப்பட்டது. வேளாண்மை அலுவலர் ஆலங்குடி சுபாஷினி நன்றியுரை வழங்கினார்.

இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை நபார்டு மாவட்ட வளர்ச்சி அலுவலர் செய்திருந்தார்.



# பழங்குடியின விவசாயிகளுக்கான (VDVK Memebers) விளைபொருட்கள் சார்ந்த மதிப்பு கூட்டல் தொழில்நுட்ப பயிற்சி



கடலூர், டிச.24

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையம், தமிழ்நாடு அரசு பழங்குடியினர் நலத்துறை மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் இணைந்து நடத்திய அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த 40 பழங்குடியின விவசாயிகளுக்கான (VDVK Members) விளைபொருட்கள் சார்ந்த மதிப்பு கூட்டல் தொழில்நுட்ப பயிற்சி 18 முதல் 21.12.24 வரை (நான்கு நாட்கள்) நடைபெற்றது. இதில் சிறுதானிய, காய்கறி, பயறு வகை மற்றும் எண்ணெய் வித்து பயிர்களில் மதிப்பு கூட்டல் பற்றி பயிற்சி கொடுக்கப்பட்டு செயல் விளக்கம் செய்யப்பட்டது. இதில் தொழில்முனைவோர்களால் பாரம்பரிய நெல் இரகங்கள், இயற்கை இடுபொருட்கள் உற்பத்தி பற்றி முருகன், முருகன்குடி, பாரம்பரிய நெல் இரகங்கள் மற்றும் சிறுதானிய மதிப்புகூட்டல், சிலம்பு செல்வி, பெரிய கொசபள்ளம், தேனீ வளர்ப்பு மற்றும் பதப்படுத்தல் பற்றி சுதந்திர செல்வன், புது கூரைபேட்டை ஆகியோர்களால் விரிவாக எடுத்துரைத்து செயல் விளக்கம் செய்யபட்டது. தொழில்நுட்பங்களை நேரடியாக கற்றுக் கொள்வதற்காக கண்டுணர் சுற்றுலா வருகை ஏற்பாடு செய்யப்பட்டு அரவிந்த் முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலை, வடலூர், துரைராஜ், நல்ல உழவன் மதிப்புகூட்டல் மையம், முகாசாபரூர், கௌரி, கௌஷிக் காளான் பண்ணை, கல்குணம் ஆகியவை பார்வையிட பட்டு பயிற்சி பெற பட்டது. இப்பயிற்சியை வேளாண்மை அறிவியல் நிலைய திட்டஒருங்கிணைப்பாளர் முனைவர் நடராஜன், பேராசிரியர்கள் முனைவர் கண்ணன், முனைவர் சுகுமாறன், இணை பேராசிரியர்கள் ஜெயக்குமார், பாரதி குமார், உதவி பேராசிரியர்கள் காயத்ரி, கலைச்செல்வி ஆகியோர் ஏற்பாடு செய்தனர். இந்த பயிற்சியில், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலத்தில் பராமரிக்கப்படும் செயல்விளக்க மாதிரிகளையும் பயிற்சியாளர்கள் பார்வையிட்டனர்.

# ஒருங்கிணைந்த களை மேலாண்மை

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரத்தில் கார்த்திகை பட்டத்தில் நிலக்கடலை சாகுபடி மேற்கொண்டு வருகின்றனர். ஒருங்கிணைந்த களை மேலாண்மை முறைகளை கடைப் பிடித்து பயன் பெறுவது குறித்து வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி பின்வருமாறு தெரிவித்து உள்ளார்.

**நிலக்கடலை களை கட்டுப்பாடு**

- விதைப்புக்கு முன்னர் : ஃப்ளுகுளோரலின் எக்டருக்கு 2.0 லி மண்ணில் அளிக்கவும். தொடர்ந்து அளவான பாசனம் செய்யவும்.

- **களை முளைப்பதற்கு முன்** : விதைத்த 3-ம் நாள் ஃப்ளுகுளோரலின் எக்டருக்கு 2.0 லி அல்லது பென்டி மெத்தலின் எக்டருக்கு 3.3 லிட்டரை தட்டை விசிறி நுன்குழாய் மூலம் 500 லி தண்ணீர் கலந்து தெளிக்கவும், தொடர்ந்து பாசனம் செய்யவும். விதைத்த 35-40ம் நாள் கைக்களை எடுக்க வேண்டும்.

- களைகளை பொறுத்து விதைத்த 20-30ம் நாள் களை முளைத்த பின்னர் இமாசிதிபர் எக்டருக்கு 750 மிலி தெளிக்கவும்.

- களைக் கொல்லி உபயோகிக்கவில்லையென்றால் மண் வெட்டி கொண்டு விதைத்த 20 மற்றும் 40-ம் நாள் களை எடுக்க வேண்டும்.

- விதைத்த 3-ம் நாள் களை முளைக்கு முன் ஆக்ஸிப்ளோர்பென் எக்டருக்கு 200 கி தெளிக்கவும், தொடர்ந்து விதைத்த 40-45ம் நாள் கைக்களை எடுக்கவும்.

- களை முளைப்பதற்கு முன் ஆக்ஸாடியாசோன் எக்டருக்கு 0.5 கிகி தெளிக்கவும். தொடர்ந்து மண்வெட்டி கொண்டு மண் அணைக்க வேண்டும் அல்லது நட்சத்திர வடிவ களையெடுக்கும் கருவியை உபயோகிக்கவும்.

- களை முளைப்பதற்கு முன் மெட்டலாகுளோர் எக்டருக்கு 1 கிகி அளிக்கவும், தொடர்ந்து விதைத்த 40-ம் நாள் கைக்களை எடுக்க வேண்டும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.